Registered as a newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

ஊடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மார்கழி மீ 03 உ. வியாழக்கிழமை ஹிஜரி 1407 ரபியு ஆகிர் பிறை 15 (18-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 19

ROYAL INSTITUTE
நவாலி — மானிப்பாய்.
Spoken English
with Grammar
(மூன்று மாதம்)
Mr. தேவராஜா
ஆரம்பம்:
20 - 12 - 1986

G.C.E. O/L
ஆண்டு 10, 9, 8, 7, 6
நடைபெறுகின்றன.
R. செல்வவடிவேல்,
K. S. முத்துலிங்கம்,
வரப்பிரகாசம்
நிமலநாதன், A, மகாலிங்கம்,
செல்வரட்டினம்
றோயல் இன்ஸ்ரிரியூட்
சிந்தாமணிப் பிள்ளையார்
கோவிலடி.



கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் திருப்பி ஒப்படைக்கக் கோரி சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்னில் இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது எடுக்கப் பட்ட படம்.

போராளிகளிடம் கைப்பற்றப்பட்ட

# ஆயுதங்களை திருப்பி ஒப்படைக்கக் கோரி சுவிஸில் ஆர்ப்பாட்டம்

பேர்ன், டிசம்பர். 17

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் திருப்பி ஒப்படைக்கும்படி கோரி சுவிட்சர்லாந்து தலைநகரில் இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றும் சுவிஸ்ஸில் உள்ள இந்தியத் தூதரிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இவ்வாறான ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், மகஜர் கையளிப்புக்கள் லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து நோர்வே, சுவீடன், டென்மார்க், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, மொஸாம்பிக் ஆகிய நாடுகளிலும் இடம்பெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் தலைநகரான பேர்னில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஒழுங்கு செய்தது.

* தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரிக்குக.

* தமிழீழம் ஒன்றே எமது தாரக மந்திரம்; தம்பி பிரபாகரனே தமிழீழ காவலன்.

* இழந்த உரிமைகளை மீட்பதற்காக போராடும் புலிகளிடமிருந்து ஆயுதங்களை பறிமுதல் செய்வதா?

மேற்கண்ட கோஷங்களை எழுப்பிய வண்ணமும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும் தமிழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்

இந்தியத் தூதரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சுவிஸ் பிரதான பொறுப்பாளர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகள் கடந்த மாத இறுதியில் நடைபெற்றன.

மற்றும் இரு செய்திகள் 4 ஆம் பக்கத்தில். (இ-எ)

## 112 தமிழர் உயிரிழப்பு

தமிழ் மாவட்டங்களில் கடந்த மாதம் மட்டும் 112 தமிழர் உயிரிழந்தனர். வெளி மாவட்டம் ஒன்றில் ஒரு தமிழர் உயிரிழந்தார்-

மாவட்டரீதியாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு;

அம்பாறை – 12
மட்டக்களப்பு – 36.
திருகோணமலை – 08
முல்லைத்தீவு - 08.
யாழ்ப்பாணம் - 24.
மன்னார் – 18.
வவுனியா - 01.
கிளிநொச்சி - 05.
வேறுமாவட்டம் – 01.

நவம்பர் மாதத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வருமாறு;

மட்டக்களப்பு - 21.
முல்லைத்தீவு - 07.
யாழ்ப்பாணம் – 138.
வவுனியா - 06.
கிளிநொச்சி – 4

## கொழும்பில் "டைம் பொம்"!

கொழும்பு, டிச. 18

கொழும்பு கோட்டைக்கு அருகில் உள்ள நியூ ஹில்டன் ஹோட்டல் பகுதியில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சக்திவாய்ந்த 'டைம் பொம்'களைபொலிஸார் நேற்றுக் கண்டுபிடித்தனர்.

இந்த இரண்டு குண்டுகளிலும் ஈரோஸ் இயக்க அடையாளங்கள் இருந்தன என்று பொலீஸ் வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

கொழும்பு யோர்க்வீதி நீதி அமைச்சுக் கட்டடத்துக்கு அருகே உள்ள உபமின் நிலையத்துக்குப் பக்கத்தில் 'பிறீவ் கேஸ்' ஒன்றில் இக்குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை 3.15 மணிக்கு வெடிக்கக்கூடியதாக இக்குண்டு தயார் படுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் அது அந்நேரத்தில் வெடிக்கத் தவறிவிட்டது.

நேற்றுக்காலை 6மணியளவில் நீதி அமைச்சின் காவலாளிஒருவர் இந்தப் பெட்டியைக் கண்டுபிடித்ததையடுத்து பாதுகாப்புப் படையினர் அதனை மீட்டனர்.

இந்தக் குண்டுகள் வெடித்திருந்தால்கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கொம்மாதுறையில் 4 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் கொம்மாதுறை என்னும் இடத்தில் ஆயுதப் படையினரால் 4 தமிழ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீடு பின்னர் தீக்கிரையாக்கப்பட்டது.

பொன்னுத்துரை என்பவருக்கு இந்த வீடு சொந்தமானது என்று கூறப்படுகிறது

இளைஞர்களின் சடலங்கள் அடையாளங்காணப்படாத நிலையில் முகாமுக்குப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-எ-21)

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
இன்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

திட்டமிட்டபடி

## மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக இன்று மறியல்

யாழ்ப்பாணம், டிச. 18

வடபகுதி ... வங்கிக் கிளைகள் முன் இன்று திட்டமிட்டபடி மறியல் போராட்டம் நடைபெற இருக்கிறது.

அடகு நகைகள் அனைத்தும் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படும் வரை —

வங்கி நிர்வாகம் உறுதியான நடவடிக்கை எடுக்கும்வரை —

மறியற் போராட்டம் தொடரும் என அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் அந்தந்தப் பகுதி மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக காலை 7.00 மணிக்குக் கூடி மறியற் போராட்டத்தில் ஈடுபடும்படி சங்கம் அறிவித்துள்ளது. (இ-10)

காங்கேசனில் வந்திறங்கின

## ஆயுதப் படையினருக்கு கப்பலில்வந்த பெட்டிகள்

### உணவுப் பொருள் இறக்குவது நிறுத்தம்

காங்கேசன்துறை, டிச. 18

காங்கேசன்துறைதுறை முகத்தில் நங்கூரமிட்டுள்ள கப்பல் ஒன்றில் இருந்துஆயுதப்படையினருக்குரிய பொருள்கள் நேற்றுக்காலை முதல் இறக்கப்பட்டன.

பெட்டிகள் இறக்கப்பட்டு ஆயுதப்படைமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

இதன்காரணமாக உணவு மற்றும் பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று இடைநிறுத்தப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 8 ராணுவம் பலி! புலிகள் 'கனன்சார்ஜ்'

### கிழவன்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 18

மாங்குளத்திற்கும் கொக்காவிலுக்கும் இடையில் கிழவன் குளத்திற்கு அண்மையில் புலிகள் நடத்திய கனன் சார்ஜில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

— இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய் காலை 30 வாகனங்களில் ... வவுனியாவிலிருந்து மாங்குளம் பக்கமாக சுமார் இருநூறு சிப்பாய்கள் சென்று கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது

இத் தாக்குதலின் போது தமது தரப்பில் இழப்பு ஏதும் இல்லை என புலிகள் அறிவித்திருக்கின்றனர் (உ-10)

முச்சந்தி முனி



சனத்துக்குச் சாப்பாட்டுச் சாமான் இறக்கிறதைவிட அவைக்குப் "பொருள்" இறக்கிறதுக்கு இவ்வளவு முன்னுரிமை பாத்தியளே.. ! காலம் கலிபிடிச்சுப் போச்சுது ..!!

## யாழ்நகரில் நேற்றிரவு திடீர் பரபரப்பு, பதற்றம்

யாழ்ப்பாணம், டிச. 18

நேற்று இரவு 8 மணியளவில் யாழ்நகரில் திடீரென பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நகரில் திறந்து இருந்த கடைகள் அனைத்தும் அவசரஅவசரமாக இழுத்து மூடப்பட்டன.

மினி சினிமாக்கள், தியேட்டர்கள்காட்சியை இடைநடுவில் ரத்துச் செய்ததையடுத்து மக்கள் முண்டியடித்துக் கொண்டு வெளியேறி நகரை விட்டுஅகன்றனர்.

நகரில் தரித்து நின்ற ஒட்டோக்கள், வாகனங்கள் ஓடி மறைந்தன.

யாழ் கோட்டையிலிருந்து இராணும் வெளி (4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
18—12—1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.53 முதல் 9.23 வரை
ராகுகாலம்:
1 53 முதல் 3.23 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்

கல்முனை சுற்றி வளைப்பு

## மாப்பிள்ளை உட்பட 4 பேர் பற்றி தகவல் இல்லை

மட்டக்களப்பு, டிச. 18

கல்முனை சுற்றிவளைப்பு தேடுதலில் விடுவிக்கப்படாமல் ஆயுதப்படை முகாமில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 38 தமிழர்களில் நான்கு பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இவர்களில் மாப்பிள்ளையான பா. சிவஞானசேகரமும் ஒருவர்.

மாப்பிள்ளையான பொ. சிவஞானசேகரம். பொ. கனகராசா ஆகியோரை கைதுசெய்யவில்லை என்று பாதுகாப்புப் படையினர் இப்போது அறிவித்துள்ளனர்.

மற்றைய இருவரான (4ஆம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம் இல்லை என்கிறார் கொத்தலாவலை

யாழ்ப்பாணம் டிச. 18

நான் யாழ்ப்பாணத்தில் இருந்து எந்த இடத்திற்கும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

தியாத்தலாவை இரா (4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசிடம் பதில் எதிர்பார்க்கிறோம்

### கொழும்பு வருமுன் சிதம்பரம்

சென்னை, டிசம்பர் 17

இலங்கை அரசின் யோசனைகள் குறித்து தமிழர் அமைப்புக்கள் சென்னையில் வைத்துத் தெரிவித்த கருத்துக்களுக்கான பதிலை இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

இப்படி இணை அமைச்சர் ப. சிதம்பரம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளரிடம் தெரிவித்தார்.

புதுடில்லியில் இருந்து சென்னையில் நேற்றுக் காலை மீண்டும் வந்திறங்கிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இணை அமைச்சர்கள் பின்னர் கொழும்பு புறப்பட்டனர். (இ-எ)

## பேச்சுக்கள் குறித்து இயக்கங்கள் கருத்து

சென்னை, டிச. 17

இந்திய இணைஅமைச்சர் குழுவைச் சென்னையில் சந்தித்த பின்னர் தமிழ்ப் போராளி அமைப்புக்களின் பேச்சாளர்கள் செய்தியாளர்களிடம் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

### புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர்:— ஒரே தமிழ்த் தாயகம் என்ற நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவும் மாறமாட்டோம். அந்தப் பேச்சுக்கே இடமில்லை. — என்றார்.

தமிழர் மாகாணத்தை விஸ்தரிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதே என்று செய்தியாளர் கேட்ட கேள்விக்கு "அபிப்பி (4ஆம் பக்கம் பார்க்க)

## முதல் சுற்றுப் பேச்சு நேற்று ஆரம்பம்

நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்த இந்திய இணை அமைச்சர் குழு நேற்று மாலை 6 30 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் முதலாவது சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பித்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, சாஹுல் ஹமீது, காமினி திஸநாயக்கா ஆகியோர் பங்குபற்றினர்.

இந்திய இணை அமைச்சர்களுடன் அரசியல் சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன், இந்தியத் தூதர் டிக்ஸிற் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-எ)

இந்திய தூதுக்குழுவை

## நீலன், பதியுத்தீன் தொண்டா சந்தித்தனர்

கொழும்பு, டிசம்பர் 18

நேற்றுப் பிற்பகல் கொழும்பு வந்த இந்திய இணை அமைச்சர்கள், இலங்கைத் தமிழர், முஸ்லிம், மலையகத் தமிழர் தலைவர்களை தனித்தனியே சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இணை அமைச்சர்களான ப. சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோருடன் அரசியல் சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன் இலங்கைக்கான (4ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு, பிரிப்பு இரண்டையும் எதிர்க்கும் பதியுத்தீன் குழுவினர்

கொழும்பு, டிச- 18

வடக்கு – கிழக்கு இணைப்பையும் எதிர்க்கிறோம். கிழக்கை மூன்றாகப் பிரிக்கப்படுவதையும் எதிர்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தூதுக்குழு டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் இந்திய இணைஅமைச்சர குழுவைச் சந்தித்து முன்கண்டவாறு வலியுறுத்தியது.

வடக்குடன் கிழக்கை இணைப்பதன் மூலமும் அல்லது கிழக்கை மூன்றாகப் பிரிப்பதன்மூலமும் முஸ்லிம்களின் நலன்கள்தான் பாதிக்கப்படும்.

முஸ்லிம்களின் நலன்களைப் பாதிக்காத விதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

— இப்படி டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார். (உ-ஐ-எ)

## இந்தியக் குழுவுடன் சிறிமாவும் பேசுவார்

கொழும்பு, டிச. 18

இன்று இந்திய இணை அமைச்சர் குழு சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்துப் பேசும்

இப்படி கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடன் இரண்டு சுற்றுக்கள் இன்று இந்திய இணை அமைச்சர் குழு பேச்சுக்கள் நடத்தும். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புவலயத்தினுள்

## டிரான்ஸ்போமர் இருப்பதால்

## பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

### மின்சாரசபை ஆணையாளருக்கு அரசாங்க அதிபர் கடிதம்

யாழ்ப்பாணம், டிச. 18

பலாலி இராணுவ முகாமின் பாதுகாப்பு வலயத்தினுள் மின்சார சபையின் டிரான்ஸ்போமர் (மின்மாற்றி) உள்ளதால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிப்படைகின்றனர்.

இப்படி அரச அதிபர் மின்சாரசபை உயர் ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அடிக்கடி ஊழியர்கள் சென்று திருத்த முடியாதபடி டிரான்ஸ்போமர் முகாமுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

இதனால் வயாவிளான், பலாலி, ஒட்டகப்புலம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது விவசாய விளைபொருள்கள் பயன்தரு மரங்கள் அழிந்து போகின்றன.

ஆகவே மயிலிட்டி ஐஸ் தொழிற்சாலைக்கருகில் உள்ள டிரான்ஸ்போமர்; ஒட்டகப்புலம் பேறைப்ஸ் பாடசாலைக் கருகில் உள்ள டிரான்ஸ்போமர் மூலமாக இப் பகுதி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இக்கடிதப் பிரதி அனுராதபுரத்திலுள்ள பிராந்திய முகாமையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

## புதிய கட்டடத்தில் உப அலுவலகம்

யாழ்ப்பாணம் டிச 18

யாழ் அபிவிருத்திச் சபையின் சுழிபுரம் உப அலுவலகக் கட்டடம். புதிய சந்தைக் கட்டட மேல்மாடிக்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்மாற்றம் செய்யப்பட்டது.

இதுவரை உப அலுவலகம் இயங்கி வந்த கட்டடம் கடந்த திங்கள் தொடக்கம் நூல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

ஆயுள்வேத வைத்திய சாலை நூல்நிலையம்இயங்கி வந்த கட்டடத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

புதிய சந்தைக் கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் அமைத்துள்ள கடைகள், வாடகை அடிப்படையில் தனியார்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

## செய்திக்கொத்து

### பரிசளிப்பு வைபவம்

கொடிகாமம், டிச. 18

கோணாவில் அ.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு வைபவம் பாடசாலை அதிபர் திரு. க. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது

அக்கராயன் கொத்தணிப் பாடசாலை அதிபர் வரணியூர் திரு சி. துரைராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாட்டு, நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன (இ-75)

### மயானத்துக்கு ரூ. 20 ஆயிரம்

கொடிகாமம், டிச. 18

நீண்ட காலமாகத் திருத்தப்படாது இருந்த கொடிகாமத்தை அண்டிய மீசாலை வடக்கு கட்டைபறிச்சான் மயானத்தைப் புனரமைக்க யாழ் அபிவிருத்திச்சபையின் சாவகச்சேரி சரசாலை உப அலுவலக உத்தியோகத்தரின் முயற்சியினால் இருபதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. மு. காங்கேசுவின் முயற்சியினால் யாழ் மாவட்ட செயலாளரும் அரச அதிபருமாகிய திரு. எம். பஞ்சலிங்கம் இதனை ஒதுக்கிக் கொடுத்துள்ளார். (இ 75)

### மகளிர் ஐக்கிய நாணயச் சங்க வங்கி

வேலணை டிசம்பர். 18

உருப்பராய் ஐக்கிய நாணய சங்கம் ஒன்று மகளிர் ஐக்கிய நாணய சங்க வங்கி ஒன்றை உருவாக்கியுள்ளது இந்த வங்கி திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் மூன்று மணித்தியாலங்கள் இயங்கி வருகின்றது. (இ-167)

# பாதிப்புற்ற மக்களுக்கு

# மன்னாரில் நிவாரண உதவி

மன்னார், டிச.18

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் பாதிப்பு அடைந்த மக்களுக்கு உதவுமுகமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

சங்கத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 81 குடும்பங்களுக்கு நெற்செய்கை, மந்தைவளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுய முயற்சி போன்ற துறைகளில் ஈடுபட நிதி உதவி வழங்கியுள்ளது.

'ஒக்ஸ்போர்ம்' தொண்டர் நிறுவனம் அடம்பனில் பாதிக்கப்பட்ட பாடசாலைச் சிறுர்களுக்கு சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை உதவியது.

மன்னார், உயிலங்குளம் அடம்பன் போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமையல் பாத்திரங்கள், உணவுப் பொருள்கள் போன்றவற்றை 'ஒக்ஸ்பாம்' மூலம் பெற்று வழங்கவும் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று ஐக்கிய இராச்சிய சிறுவர் பராமரிப்பு நிதியம் அடம்பன் மன்னார் வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்கியது நிதியப் பிரதிநிதி செல்வி கிளாயர் மன்னார் விஜயம் செய்து நிலைமையை நேரில்பார்வையிட்டார்.

இதனிடையில் பாதிக்கப்பட்ட 75 விவசாயக் குடும்பங்கள் தலா ஒரு ஏக்கரில் நெற்செய்கை செய்வதற்குத் தேவையான செலவுகளை வழங்கவும் சங்கம்நடவடிக்கை எடுத்துவருகிறது.

1985, 86 ஆண்டுக் கலவரங்களில் உயிரிழப்பு, சொத்துக்கள் பாதிப்புக்கு ஆளான 75 குடும்பங்கள் இதற்காக தெரிவு செய்யப்படும். (உ-எ)

## நேர்முகப் பரீட்சைக்கு 800 பேர் தோற்றினர்

யாழ்ப்பாணம், டிச. 18

தமிழ்மொழி மூலம் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் 800 பேர்வரை சமுகமளித்தனர்.

இவர்களில் தெரிவாகும் 80 பேர் வடக்கு, கிழக்கு, தோட்டப்பகுதிகளில் கடமை புரிவார்கள் என கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதியிலிருந்து 1800 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவர்களில் 800 விண்ணப்பதாரர்கள் வரையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இளைஞர் சேவை மன்ற செயற்பாடுகளில் ஆர்வமுள்ள பங்குபற்றியவர்களுக்கு பதவிக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மூன்று தினங்களாக யாழ் விடமைப்புச் செயலகத்திலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்றது. (இ-5)

### புதிய தபால் நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிச.18

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மாகிரிக்கிராமங்களுக்கு புதிய தபால் நிலையங்களை அமைப்பதற்கு அம்பாறை மாவட்ட அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 86 உப தபால் நிலையங்கள் நிறுவப்பட்டுடன், 18 உப தபால் நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. (இ-5)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## சைவத்தையும் தமிழையும் நிலைநிறுத்தினர் இராமநாதன்

### ஸ்தாபகர் நினைவுநாளில் உரை

மானிப்பாய், டிச. 18

தான் ஒரு தமிழன். அதிலும்இந்து மதத்தவன் என்பதை அந்நிய ஆதிக்கத்தின்கீழ் கூட நிலைநாட்ட திரு இராமநாதன் தவறவில்லை. ஆங்கிலேயரின் மதமாற்றத்தைக் கண்டித்து, இந்து தமிழ்க் கல்லூரிகளை நிறுவி சைவத்தையும் தமிழையும் இங்கு நிலைநிறுத்தினார் அவர்.

செந்தமிழ்ச் செல்வி— செல்விதங்கம்மா அப்பாக்குட்டி இப்படிக் கூறினார்

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற ஸ்தாபகர் நினைவு நாளில் அவர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் தமது உரையில், சகல இன சமூக மக்களும் கல்வி பயில வாய்ப்பளிக்கும் வகையில் சர்வகலாசாலைகள் தோன்ற வேண்டும் என்ற அவரது கனவு தற்போது நிறைவேறியுள்ளது என்றார்.

ஸ்தாபகர் நினைவு நாளை முன்னிட்டு இராமநாதன் கல்லூரி வளவில் அமைந்துள்ள சமாதி ஆலயத்தில் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்றன. (இ-90)

## கொத்தணி அமைப்பு வடக்கில் தோல்வி

### கருத்தரங்கில் விரிவுரையாளர்

பலாலி, டிச. 18

புதிய கல்விச் சீரமைப்பின் விதந்துரையான கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை படுதோல்வி அடைந்துள்ளது. 'எதிர்பார்க்கப்பட்ட எந்தவித நன்மையும் இம்முறையால் கிடைக்கவில்லை. நிதி விரயம் ஒன்றே இதனால் ஏற்பட்டது'.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அண்மையில் நடத்தப்பட்ட கல்வியியல் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. வ. ஆறுமுகம் எம். ஏ. அவர்கள் கூறினார்கள்.

அவர் மேலும் கூறியதாவது:-

கொத்தணி முறை அமைப்பதற்கான ஆலோசனைகளிலும், விதந்துரைகளிலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய நோக்கங்களில் ஏதும் நிறைவேறவில்லை

கல்வி வளங்கள் விரயமாகாது பயன்படுத்தப்படுதல்—

வளர்ந்த - சிறிய பாடசாலைகளுக்கிடையே வேறுபாடுகள், எண்ணக் கருத்துக்கள் நீக்கப்படுதல்—

ஆசிரியர் சேவையணியின் சமமானமுறையில் கலந்து பயன்படுத்துதல்—

மையப் பாடசாலையோடு அண்டிய பாடசாலைகளின் வளர்ச்சியை மையப் பாடசாலையே சிறப்பாகக் கவனிக்க முடிதல்—

போன்ற காரணங்களில் எதுவும் நிறைவேறவில்லை என்பதை நாம் கவனிக்க முடிகின்றது

இதனால் முன்பிருந்த கல்விச் செயற்பாடுகளிலும் பார்க்க மோசமான குழப்ப நிலை கொத்தணி முறையில் ஏற்பட்டுள்ளது.

—இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-119)

## விற்பனைக்கு

ஒரு மாதம் HY-LINE பேட்டுக்குஞ்சு விற்பனைக்குண்டு அத்துடன் ஒரு நாள் HY-LINE பேட்டுக்குஞ்சு. ஒரு நாள் BAIRAHA இறைச்சிக் குஞ்சு ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும். தொடர்பு: இராசா போரேஜ் ஸ்ரோர், நெல்லியடி. (மத்திய சந்தை முன்பாக)

1964ஆம் ஆண்டு
றெக்கிளமேசன் சனசமூக நிலையத் தலைவராக இருந்த
அமரர் சவிரிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை (பிரான்சிஸ்)
ஞாபக வைபவம்
22-12-86இல்
நிலையத்தில் நடைபெறவுள்ளது. வைபவத்தில் பரிசிற்குரியோர் தெரிவும் நடைபெறும், அனைவரும் சமூகம்தரவும்.
பொது அறிவுப் போட்டி விவரங்கள் நாளைய உதயனில்

### திருத்தவேலை

வல்வெட்டித்துறை 18

வல்வெட்டித்துறைச் சந்தியில் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் பெரும் இடையூறாக இருந்து வரும் தந்திக் கம்பங்கள். மதகுகள் வல்வை நகரசபை ஊழியர்களால் உடைக்கப்பட்டு போக்குவரத்து தடையின்றி நடப்பதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-160)

### வடமராட்சிப் பகுதியில்

## சரணடைந்த ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் பலர் விடுதலை

கரவெட்டி, டிச. 18

வடமராட்சியில் புலிகளிடம்சரணடைந்த ஈ பி ஆர். எல். எவ் போராளிகள் பலர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 8 மணி அளவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் வடமராட்சியில் உள்ள ஈ பி. ஆர். எல். எவ் முகாம்கள் அனைத்தின் மீதும் தாக்குதல் நடத்தினர். அப்போது ஈ.பி ஆர். எல். எவ் போராளிகளில் சிலர் மட்டுமே கைது செய் செய்யப்பட்டனர், எனினும் ஞாயிற்றுக்கிழமை துன்னாலை, கலிகை கோவிற்சந்தை, கிழவி தோட்டம், இராஜகிராமம், கட்டைவேலி போன்ற பகுதிகளை புலிகள் முற்றுகையிட்ட போது பலர் கைது செய்யப்பட்டனர்.

திங்கட்கிழமை காலையில் பலர் சரணடைந்தனர். இதில் நெல்லியடி கரவெட்டி பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50 பேர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

இதே வேளை வடமராட்சி பகுதியில் மேலும் ஈ பீ. ஆர். எல் எவ். போராளிகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வடமாராட்சி பிரதான முகாமில் சரணடைந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளதாகவும் மேலும் சரணடைய விரும்புபவர்கள் தமது முகாம்களில்வந்து சரணடையலாம் என்றும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் வடமராட்சி பொறுப்பாளர் திரு. ஆசை கேட்டுள்ளார்

இதனைத் தொடர்ந்து மேலும் பலர் செவ்வாய்க்கிழமை காலை வடமராட்சி பிரதான முகாமில் சரணடைந்தனர் என்று தெரியவந்துள்ளது.

இதே வேளை நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த ஈ.பி. ஆர். எல். எவ். இன் இறந்த போராளிகளின் உருவப் படங்கள் மூன்று விடுதலைப்புலிகளினால் அகற்றப்பட்டன.(இ-70)

## அங்கத்தவர் உயர்வுக்கு உழைக்கும்சங்கங்களில் தமிழர்ஆசிரியர்சங்கமும்ஒன்று

கொழும்பு, டிச 18

இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களில் சில தான் அங்கத்தவர்களின் உயர்வுக்காக உழைக்கின்றன. அப்படியான முன்மாதிரித் தொழிற் சங்கங்களில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும்ஒன்று.

தொழிற்சங்க உதவிப் பதிவாளர் திரு. உபாலி விஜயவீர முன்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கம், பிரெடறிக் ஈபேட் மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய 'தொழிலகள் முன்னேற்றத்தில் ஆசிரிய தொழிற் சங்கங்களின் பங்கு' என்ற கருத்தரங்கின் நிறைவுநாள் நிகழ்ச்சிக்கு திரு. உபாலி விஜயவீர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அப்போது பேசுகையிலே முன்கண்டபாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கா. சோமசுந்தரம் தலைமையில் கொழும்பு ஹோட்டல் சிலோன் இன்சிலில் இந்த நிகழ்ச்சி நடந்தது. (இ-எ)

## கல்வியங்காட்டில் நடந்த இலவச கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், டிச. 18

நல்லூர் ஆலாலசுந்தரம் சனசமூக நிலையம், கோப்பாய் லயன்ஸ் சழகத்துடன் இணைந்து இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்றை அண்மையில் நடத்தியது.

வன்னியசிங்கம் படிப்பகம்— ஆலாலசுந்தரம் சனசமூக நிலையக் கட்டடத்தில் இம்முகாம் நடத்தப்பட்டது

கண்களில் குறைபாடுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களை கண் வைத்திய நிபுணர் டாக்டர் சி. அருணாசலம் பரிசோதனை செய்தார்.

முகாம் முடிவில் காசிப்பிள்ளை மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் டாக்டர் அருணாசலம் மாலைசூட்டி கௌரவிக்கப்பட்டார்.

லயன்ஸ் கழகங்கள் பொதுமக்களுக்கு அளப்பரிய தொண்டு புரிந்து வருகின்றன என்று திரு. நடராசா சொன்னார்.

கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினரும் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபருமான திரு. க. கிட்ணர். கண் வைத்திய நிபுணர் டாக்டர் அருணாசலத்தின் சேவை மனப்பான்மையைப் பாராட்டிப் பேசினார்.

இலவச கண் பரிசோதனை முகாமை நடத்த உதவிய செல்விகள் கி. தயாளினி, சு. பேபி சரோஜா வுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### மேரிபஸ்தியன் பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், டிச. 18

நவாலி மேரிபஸ்தியன் பாலர் பாடசாலைக்கான புதிய கட்டடம் அண்மையில் மானிப்பாய் பங்குக்குரு அருட் திரு எஸ் செபஸ்தியான் அடிகளாரினால் திறந்து வைக்கப்பட்டது

இப்பாடசாலைக்கான கட்டடத்தை திரு இ. இராயப்பு அன்பளிப்புச் செய்து இருந்தார்.

செபஸ்தியன் அடிகளார் திரு. இராயப்புவின் முன்மாதிரியைப் பாராட்டிப் பேசினார்.

பாடசாலை ஆசிரியை செல்வி சுவர்ணமதி யோசப் பேசுகையில் "ஆரம்ப பாடசாலைக்கும் வீட்டுக்கும் ஒரு பாலமாகவே பாலர் பாடசாலைஅமைகின்றது —என்று குறிப்பிட்டார். (உ-எ)

### கூட்டம்

யாழ்ப்பாணம், டிச.18

அரியாலை கிழக்கு பூம்கார் ஐக்கிய நாணய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 21 ஆம் திகதி பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கிராம சேவை அதிகாரி ... ஆகியோர் ... வர். (இ-எ)

### சனசமூக நிலையத்துக்கு காணி

யாழ்ப்பாணம், டிச. 18

காரைநகர் சடையாளி கலைவாணி சனசமூக நிலையத்துக்கு காணித்துண்டு ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர், நடுத் தெருவைச் சேர்ந்த திரு. நல்லதம்பி கனகநாயகம் இந்த நன்கொடையைச் செய்தார்.

அவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை சனசமூக நிலைய நிர்வாகசபை நிறைவேற்றியுள்ளது.

நன்கொடை செய்யப்பட்ட காணியில் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்கும் ... மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-எ)

### சுகாதார நிலைய நிறைவு விழா

சாவகச்சேரி, டிச 18

நுணாவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலைய முதலாண்டு நிறைவு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இம்மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

நிலையத் தலைவர் இளைப்பாறிய அதிபர் திரு பூ. வெற்றிவேலு தலைமையில் இடம்பெறும் இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர் திரு. எம். கனகசபை கலந்து கொள்வார்.

சுகாதாரம் சம்பந்தமான கருத்துரைகளும் சிறுவர்களது பேச்சு, வில்லுப்பாட்டு, நடனம் நாடகம் முதலான நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-31)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அந்தியேட்டி அழைப்பிதழ்



பிறப்பு: 20 - 04 - 1934

மறைவு: 23 11 . 1986

எம். எஸ். சண்முகலிங்கம்
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர், கொட்டாஞ்சேனை.)

எனது மூத்த மகன் சண்முகலிங்கத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 23-12-1986 செவ்வாய்க்கிழமை மீசாலையில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நண்பர்களையும் உறவினர்களையும் சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு,
மு. சின்னத்தம்பி
(இளைப்பாறிய அதிபர், வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை,)

பிரயாண ஒழுங்குகள்
லண்டன் - ஜேர்மனி - நோர்வே
கனடா - சிங்கப்பூர்
சவூதி அரேபியா (வேலை வாய்ப்புடன்)
மேற்குறிப்பிட்ட நாடுகட்கு செல்ல விரும்புவோர்க்கு உடனடி ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.
சிங்கப்பூர்
தொழில் வாய்ப்புடன் செல்ல விரும்பும் பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும். துரித கதியில் அனுப்பி வைக்கப்படும்.
TRI STAR TRAVELS
ரை ஸ்ரார் ரவல்ஸ்
யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்
1. 71 குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. V. குகராஜா, மயிலியற்புலம் கந்தசாமி கோயிலடி.
3. N. தவானன், மயிலிட்டி வடக்கு, கன்னுகம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம

மதம் வாழ்க்கையின் இரகசியங்களை விளக்குகிறது; அமரபதத்திற்கு வழிகாட்டு கிறது மதம் என்பது இறைவனில் வாழ்வதாகும் அது கடவுளைப் பற்றிய வெறும் சர்ச்சை மட்டும் அல்ல

— சுவாமி சிவானந்தா

உதயன்

உண்மை - நிதானம் - நடுநிலைமை

இல.15 உஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 18-12-1986 த.பெ இல 83

## சரிபடுத்தலா, நிர்ப்பந்தமா?

இனப்பிரச்சினை குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்திய இணை அமைச்சர்கள் குழு நேற்றுக்கொழும்பு வந்து சேர்ந்தது.

இவ்வாறான பேச்சுக்கள் கடந்த மூன்றரை வருடங்களாக பலதடவைகள் நடந்துவிட்டன. ஆனால் பெறுபேறு வெறும் வட்டம்—பூச்சியம் தான்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இது இழுத்தடிப்பில் போய், இழுபறியில் நின்று இன அழிவில் முடியுமோ என்று அவர்கள் நியாயபூர்வமாகச் சந்தேகிக்க கூடிய கட்டம் வந்திருக்கிறது.

தெரிந்தோ தெரியாமலோ இப்பிரச்சினையில் தனது விரலை வைத்த இந்தியாவும் தமிழரின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப ஒரு தீர்வுக்கு உதவுமா? என்ற சந்தேகமும் ஈழத்தமிழ் மக்களிடம் உதிக்கத் தொடங்கிவிட்டது.

இந்தியாவும் தனது சொந்த நலனை முன் வைத்துத் தான் பிரச்சினையை அணுகுகிறதா என்ற ஐயப்பாடும் தமிழ் மக்கள் மனதில் எழத் தொடங்கி இருக்கிறது. இதுவரையும் அதனை நம்பி இருந்தது வீண்தானோ என்று தமிழர்கள் தங்களைத் தாங்களே தட்டிக் கேட்கும் நிலையும் உருவாகி வருகிறது.

இந்தியா பெரும் ராஜதந்திரம் தெரிந்த நாடு. அதனால் அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் அர்த்தத்துடன் தான் இருக்கும் எனவே அதன் மீது ஈழத்தமிழர்கள் அவசரப்பட்டுச் சந்தேகம் கொள்வது உகந்தது அல்ல. இவ்வாறு எல்லாம் சிந்தித்தவர்களும் தமது மனநிலையை மறுபரிசீலனை செய்யவேண்டிய கட்டம் தோன்றி இருக்கிறது.

உதயனின் நேற்றைய முன்பக்க முதற் செய்தியை வாசித்தவர்களுக்கு இது தெட்டெனப் புலப்பட்டிருக்கும்.

திங்கட்கிழமை சென்னையில் தமிழர் அமைப்புகளுடன் சிதம்பரம் குழுவினர் நடத்திய பேச்சுக்கள் தோல்வி கண்டு விட்டன.

தமிழர் தாயகக் கோட்பாட்டை—கோரிக்கையை விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எமது அடிப்படைக் கோரிக்கை.

இவ்வாறு, பேச்சில் பங்குபற்றிய தமிழர் அமைப்புகள் ஆறும் அடித்துக் கூறிவிட்டன. அதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கையைத் தமிழர் தாயகத்தில் இருந்து குறைப்பதற்கு இப்போது மத்திய அரசு முயற்சிக்கிறது.

அதாவது தனி நாட்டிலிருந்து தமிழர் தாயகத்துக்காகப் படி இறங்கி வந்தவர்களை மேலும் இறங்கவைக்க வேண்டும் என இந்தியா எண்ணுகிறது போலும்.

எம். ஜி. ஆரின் செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழர் அமைப்புக்களை சரிப்படுத்துவது என்பது என்ன? கௌரவமான முறையிலான நிர்ப்பந்தம்!

தமிழகத்தில் போராளிகளைக் கைது செய்ததும். அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றியதும் தொடர்பு சாதனங்களைப் பறித்து எடுத்ததும், அவர்கள் நடமாட்டத்தைக் கண்காணிப்பதும் —

இந்தச் செயல்கள் ஈழத்தமிழர்களை-- அவர்களின் அமைப்புக்களை நிர்பந்திப்பதற்கான, அமுக்கி அழுத்துவதற்கான சமிக்ஞைகளாக அமைந்தன என்றே கருத வேண்டி உள்ளது.

இவை குறித்துத் தமக்கு முன்னரே தெரியாது, தாம் உத்தரவிடவில்லை என்று மத்திய அரசு கூறியதையும் இப்போது நம்பமுடியவில்லை.

அவை நிர்ப்பந்தம் செய்வதற்கு முன்னேற்பாடாக நடந்த திட்டமிட்ட நடவடிக்கைகள் என்றே கருத வேண்டி உள்ளது.

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற அவசரத்தில் தமிழர்களை மட்டும் நிர்ப்பந்திக்க முயற்சிப்பது ஏன்?

அவர்களுக்குத் தஞ்சம் கொடுத்து, தரிப்பிடம் கொடுத்து ஆதரவளித்ததற்குக் கைமாறாக ஈழத்தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறதா?

தலையிடி தனக்கு வந்தால் தான், அதனால் ஏற்படும் உபாதையும் வேதனையும் ஒருவனுக்குப் புரியும். அதே போல ஈழத்தமிழர்களுக்குத் தான் அவர்களது கஷ்டங்கள், இன்னல்கள், வேதனைகள் தெரியும். தமிழர் தாயகம் இல்லாமல் தனக்கு இனி வாழ்வு இல்லை என்பதும் அவனுக்குத் தான் புரியும்.

அதை விடவும் இறங்கிப் போகும் நிலையில் அவன் இல்லை. ஏற்கனவே விட்டுக் கொடுத்தவர்களை மேலும் விட்டுக் கொடுக்குமாறு கேட்பது நியாயமாகாது.

எனவே ஸ்ரீலங்கா அரசின் பக்கம் தான் இந்தியாவின் நிர்ப்பந்தம் அவசியம். ஆரம்பத்திலிருந்தே விடாப்பிடியில் நிற்கும் ஸ்ரீலங்காவைத் தான் விட்டுக் கொடுக்குமாறு வற்புறுத்த வேண்டும். இப்போதுள்ள ஒற்றை ஆட்சி முறையை மாற்றி அரை சமஷ்டி முறைக்காவது மாறும்படி நிர்ப்பந்திக்க வேண்டும். தமிழரின் அடிப்படைக் கோரிக்கையை ஏற்குமாறு வற்புறுத்த வேண்டும்.

மத்தியஸ்தம் எப்போதும் பாதிக்கப்பட்டவனுக்கு நிவாரணம் தேடித் தருவதாக இருக்க வேண்டும். பாதகம் செய்வோரின் தாளத்துக்கு ஆட்டம் போடும் மத்தியஸ்தரால் உண்மையான சமரசத்தை உருவாக்க முடியாது.

இந்தச் சிறு விடயம் இந்தியாவுக்குப் புரியாதது ஏனோ?

பஞ்சாப்பில்

# எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

சண்டிகார், டிச.17

பஞ்சாப் சட்டசபைக் கூட்டத்தில் காங்கிரஸ் (ஐ) பாரதீய ஜனதா க. சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மாநிலத்தில் மோசமடைந்துவரும் சட்ட ஒழுங்கு நிலைமையை எதிர்க்கும் வகையில் இந்த வெளிநடப்பு மேற்கொள்ளப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவி திருமதி குர்விந்தார் காட்ரால் தலைமையில் இந்த வெளிநடப்பு நடைபெற்றது

தங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று மாநில மக்கள் உணர்வதாக அவர் கூறினர்

மாநில முதலமைச்சர் சர்ஜீத்சிங் பர்னாலா இந்த வெளிநடப்பு நியாயமற்றது என்றும் சபையின் நாளைய கூட்டத்தில் சட்ட ஒழுங்கு நிலைமைபற்றி விசாரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஒ)

### விசாரணைக்குழு தலைவர் தெரிவு

வாஷிங்டன், டிச.17

அமெரிக்கா ஈரானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு உருவாக்கப்பட்டுள்ள விசேட செனட் சபை குழுவின் தலைவராக எதிர்கட்சியான ஜனநாயக கட்சியைச் சேர்ந்த செனட்டர் டானியல் நிமோய் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஜனநாயக மூலம் சீர்குலைப்புவேண்டாம்

கெய்ரோ, டிச, 17

ஜனநாயக சுதந்திரத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி நாட்டின் உறுதிப்பாட்டையும், பாதுகாப்பையும் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்

இவ்வாறு எகிப்திய ஜனாதிபதி முபாரக் மத தீவிரவாதிகளை எச்சரித்தார்.

மதத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வன்செயல்களில் ஈடுபடும் பலர் ஜனநாயகம் என்ற போர்வையில் செயல்படும் நிலைமை மாறவேண்டும்

எகிப்தின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்த மதவாதிகள் 32 பேரை கடந்த வாரம் எகிப்து கைது செய்து காவலில் வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி முபாரக் தெரிவித்தார். (ஒ)

### யூதர்களுக்குத் தொல்லை

தெல்அவிவ், டிச 17

ஜோர்தான் மேற்குக் கரையில் அமைந்துள்ள குடியேற்றத்தில் வாழும் பலஸ்தீன மக்கள் யூதக் குடியேற்றவாதிகளை தொல்லைப்படுத்துகின்றனர்.

இவ்வாறு இஸ்ரவேலின் படைவீரர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ)

வியட்நாமில்

# பிரதமர் ராஜினாமா; புதியவருக்கு வழி!

ஹனோய், டிச. 17

வியட்னாம் அரசின் பிரதம மந்திரி உட்பட மூவர் தமது பதவியில் இருந்து விலகி புதிய தலைமை வருவதற்கு வழி வகுத்துள்ளார்கள்.

வியட்னாம் பிரதமர் பாங் — வான் — மொங் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலானர் அயங்சிங், மற்றும் அரசியல் நிர்வாகக்குழு பிரமுகர் லீடோ சொங் ஆகியோரே இன்று தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தவர்களாவர்.

தற்பொழுது வியட்னாமில் நடைபெற்று வரும் கம்யூனிஸ்ட் கட்சியின் 6வது உச்சி மாநாட்டில் இவர்கள் சமர்ப்பித்த ராஜினாமாவை மத்திய குழு ஏற்றுள்ளது.

உச்சி மாநாடு நாளை முடிவடைய முன்னர் புதிய பிரதமரை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் பிரதிப் பிரதமர் உட்பட சில முக்கிய தலைவர்கள் கட்சியின் அரசியல் பிரிவிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

கம்பூச்சியாவில் நிலைகொண்டுள்ள ஒரு லட்சத்து நாற்பதாயிரம் வியட்நாமிய துருப்புக்களின் நிலைபற்றியும் இந்தக் கூட்டத் தொடரில் ஆராயப்படும். (ஒ)

### வெளி உலகில்

## அபிவிருத்திச் சங்கம் நிதி உதவி வழங்கும்

வாஷிங்டன், டிச. 17

அபிவிருத்தி குன்றிய நாடுகள் அடுத்த மூன்று வருடங்களில் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து ஆயிரத்தி எழுநூற்றி நாற்பது கோடி டாலர்களை உதவியாகப் பெற்றுக் கொள்ளும்

ஜப்பான் சர்வதேச அபிவிருத்திநிதிக்கு ஆகக் கூடுதலான நிதியைச் செலுத்தும். இதற்கு அடுத்தபடியாக பிரான்ஸூம் நியூசிலாந்தும் ஆகக் கூடுதலான தொகையை வழங்கவிருக்கின்றன.

சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் உதவித் தொகையில் பெரும் பகுதி சகாரா பாலைவனத்தைச் சூழ்ந்துள்ள வறிய நாடுகளுக்கு வழங்கப்படும். சிறிய தொகை ஆசியாவின் பின்தங்கிய நாடுகளுக்கு கிடைக்கும். (ஒ)

### ஈராக்கிற்கு ரஷ்ய ஆயுதம்?

குவைத், டிச. 17

குவைத் தேசத்திற்கு ஊடாக ஈராக்கிற்கு பல தரப்பட்ட நவீனரக யுத்தஆயுதங்களை ரஷ்யா அனுப்பிவைக்கின்றது.

இவ்வாறு தெரிவித்த குவைத்திலுள்ள அமெரிக்க ராஜதந்திரி ஒருவரை மர்மமாக இனந்தெரியாதவர்கள் கடத்தி உள்ளனர். (ஒ)

### மீண்டும் தூதரகம்

பீகிங், டிச.17

இருபத்தைந்து ஆண்டு கால இடைவேளைக்குப் பின்னர் சீனாவில் ரஷ்யா தூதரகம் ஒன்று ஷங்காயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### ஆளும் கட்சி படுதோல்வி

போட்ஒவ்ஸ்பெயின், டிச.17

ரினிடாட்-- டோபாகோவில் நடந்த தேர்தல்களில் ஆளுமகட்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

இத்தேர்தல்களில் கடந்த 32 வருடகாலமாக பதவியில் இருந்து வந்த தேசிய மக்கள் இயக்கம் படுதோல்வி அடைந்தது

எதிர்க்கட்சியான தேசிய ஒருமைப்பாட்டுப் புனரமைப்பு இயக்கம் 36 உறுப்பினர்கள்கொண்ட சபையில் 33 ஆசனங்களை பிடித்தது.

பிரதமர் ஜோர்ச் சேம்பர்ஸ் தமது ஆசனம் இழந்தார்.

புதிய பிரதமராக ரொபின்சன் பதவி ஏற்றார். புனரமைப்பு இயக்கம் பெரு வெற்றி பெற்றது. (ஒ)

# கிழக்கின் தலைவிதியை யாரோ எல்லாம் நிர்ணயிக்கிறார்களே!

கொழும்பு டிச. 18

கிழக்கு மாகாணத் தமிழரின் தலைவிதியை யாரோ எல்லாம் நிர்ணயிருக்கிறார்கள்! நமது அபிப்பிராயத்தை ஒருவரும் கேட்கிறார்களில்லையே!

இப்படிப் பெரும்கவலை தெரிவித்தார் உள்நாட்டமைச்சரும் கல்குடா எம். பி யுமான திரு கே. டபிள்யு தேவநாயகம்.

அவரது அமைச்சு அலுவலகத்தில் அவரின் தலைமையில் கிழக்குமாகாண தமிழ் முஸ்லிம் சிங்கள எம் பி. க்களின் கூட்டம் ஒன்றுசெவ்வாய்க்கிழமை நடந்தது

இனப்பிரச்சினைத் தீர்வில் கிழக்கு மாகாணத்தின் நிலை என்ன என்பது பற்றி இந்தமாநாட்டில் ஆராயப்பட்டது

மூதூர் எம். பி யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம் இ. எச். மஹரூப், கல்முனை எம். பி. யும முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர் அமைச்சர் செ. இராசதுரை ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லிம் எம். பி. க்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். செய்தியாளர்களும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

### முஸ்லிம் எம். பி. களின் நிலைப்பாடு

முஸ்லிம் எம் பி. க்கள் ஒரே குரலில் சமாதானத்தைக் கொண்டுவரும் ஒரு தீர்வுதான் தமக்குத் தேவை என்றனர்.

வடக்கு — கிழக்கு இணைப்பு வந்தாலும்சரி, வராவிட்டாலும் சரி — ஒன்றையுமே நாம் எதிர்க்கப் போவது இல்லை.

இணைப்பு வந்தால் முஸ்லிம்களுக்குரிய ஆட்சி அந்தஸ்து கொடுக்கப்பட்டால் போதும். எமக்குத் தேவை சமாதானந்தான் — இப்படி முஸ்லிம் எம், பி. க்கள் தெரிவித்தனர்.

சிங்கள எம் பி. க்களான திரு டி. ஜி. தயாரத்ன, (அம்பாறை) திரு செ. டி, வீலரத்தின ஆகியோர்—

"சிங்களப் பகுதிகளை

## தேவநாயகத்துக்கு இப்படியும் ஒரு கவலை

கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து எடுக்கக் கூடாது'' என்று தெரிவித்தனர்.

சேருவில தொகுதி முழுவதும் சிங்களப் பிரதேசமே என்று திரு. வீலரத்தினவாதிட்டார். தேவா

அமைச்சர் தேவநாயகம் பேசுகையில் --

இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிப் பேசப்படுகிறது. கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பது பற்றிப் பேசுகிறார்கள்.

கிழக்கு மாகாணத் தமிழரின் தலைவிதியை யாரோ எல்லாம் தீர்மானிக்கப்போகிறார்கள். எமது அபிப்பிராயத்தை எவரும் கேட்பதாக இல்லையே -- என்று குறைப்பட்டார்.

வடக்கு-கிழக்கு இணைந்தால் பிரச்சினைக்குச் சுமுகத்தீர்வு கண்டுவிடலாமே என்று ஒரு செய்தியாளர் கேட்டதற்கு அமைச்சர் தேவநாயகம் -

'வட மாகாணத் தமிழருடன் கிழக்கு மாகாணத் தமிழர் சேர்ந்து வாழ முடியுமா?–என்று திருப்பிக் கேட்டார்.

கிழக்கில் உள்ள சிங்களப் பகுதிகளை தனியாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு தமிழ், முஸ்லிம் பகுதிகளை உள்ளடக்கிய மாகாண சபை ஒன்றை அமைத்துக் கொள்வது புத்திசாலித்தனமானது என்ற விதத்திலான தனது யோசனையை திரு தேவநாயகம் வெளியிட்டாராம்.

(உ-ள-21)

# மனித சமுதாயத்தையே சீரழிக்கின்றது

### போதைவஸ்து-- மது கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், டிச.18

மனிதனின் உடலையும் உணர்ச்சியையும், செயற்பாட்டையும், மனப்பாங்கையும் பாதிக்கக்கூடிய வகையில்; போதைப் பொருள்களும், புகைத்தலுக்குரிய பொருள்களும், மதுபானங்களும் விஞ்ஞான வாயிலாக கண்டு பிடிக்கப்பட்டு மனித சமுதாயத்தையே சீரழிவிற்குக் கொண்டு செல்கின்றன.

யாழ் மாவட்ட வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு சீ எஸ் சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்

யாழ்மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கான போதைப் பொருள்கள் பாவித்தல், மதுபானம் அருந்துதல், புகைத்தல் ஆகியவற்றால் ஏற்படும் தீமைகள் பற்றிய கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றினார்.

கருத்தரங்கு பிரதம கல்வி அதிகாரி திரு. வி. ... யாழ் இந்து கல்லூரியில் நடைபெற்றது.

ஒவ்வொரு கல்லூரியிலுமிருந்து இரண்டு உயர்தர வகுப்பு, மாணவர்கள்கலந்துகொண்டனர்.

கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் பேசுகையில்;

மாணவர்கள் பிள்ளைகள் முன்னிலையில் பெற்றோர் — ஆசிரியர்கள் புகைப்பதை மதுபோதையில் இருப்பதை தவிர்க்க வேண்டும்.

புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டுக்கும் ஆயுளின் 5நிமிடம் குறைகின்றது.

இளைஞர்கள் இதய நோயால் இறப்பதற்குக் காரணம் புகைத்தலே.

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் 12 வீதமானோர் இப்பழக்கத்திற்கு அடிமைகளாக உள்ளது: பெரும்கவலைக்குரிய விடயம்.

இப்படி அவர் கூறினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரமும் பேசினார்.

கருத்தரங்கில், வைத்திய கலநிதி, சி எஸ். நச்சினார்க்கினியன், பேராசிரியர் ஏ. நாகேஸ்வரன், வைத்தியகலாநிதி டி. ஜோ சோமசுந்தரம், பேராசிரியர் ரீ. கணேஸ்வரன், வைத்திய கலாநிதி என். சிவராசா ஆகியோர்கலந்து கருத்துரைகள் நிகழ்த்தினர்.

(இ-5)


### பொய்யாமொழி

குறள்:

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

பொருள்:

நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.



### சமய நிகழ்ச்சிகளில்

### திருவாசக விழா

சாவகச்சேரி, டிச.18

சரசாலை வடக்கு இலந்தைத் திடல் ஸ்ரீவீர மாகாளி அம்மன் ஆலயத்தில் திருவாசக விழா போயா தினத்தன்று சிறப்புற நடைபெற்றது.

சைவ பெரியார்களின் சொற்பொழிவுகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக சைவமகா சபையினரின் திருவாசக முற்றோதலும் இடம் பெற்றது

சிவாசாரியர் திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வழமைபோல் போயாதினத்தில் நடைபெறும் திருவிளக்குப் பூசை கூட்டு வழிபாடு ஆகியவையும் இடம் பெற்றன. (உ-31)

### முத்திரைக்கு தட்டுப்பாடு

சாவகச்சேரி, டிச.18

மட்டுவில் தெற்கு உப தபால் நிலையத்தில் முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

சிலதினங்களாக பத்துச்சத முத்திரை தவிர வேறெந்த முத்திரையும் இல்லையே என தபால் நிலைய அதிபர் கையை விரிக்கிறார். (உ-31)

### இருபது பேருக்குப் பயிற்சி

வேலணை, டிச 18

வேலணை உதவி அரசாங்க பிரிவினுள் உள்ள பத்து கிராமோதயச் சபைப் பிரிவுகளிலிருந்தும் புதிதாகத்தெரிவு செய்யப்படும் இருபது பேருக்கு தச்சு, மேசன் பயிற்சிகள் வழங்கப்பட இருக்கின்றது.

இப்பயிற்சியாளர்களின் பயிற்சிக்குத் தேவையான ஆயுத உபகரணங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கியுள்ளது.

பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். பயிற்சியின் முடிவில் திறமை காட்டுபவர்கள் யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்

ஏற்கனவே இது போன்ற இருபதுபேர் பயிற்சியைப் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. இப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதில் இப் பகுதி விசேட சேவை உத்தியோகத்தர்களும், வீடமைப்பு உத்தியோகத்தர் திரு.வீ சிவஞான சேகரமும் ஈடுபட்டுள்ளனர். (உ-167)

# கிளிநொச்சியில் சட்டவிரோத மின் பாவனைக்குத் தடை

கிளிநொச்சி, டிச. 18

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மின் பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் கடும் நடவடிக்கைக்குள்ளாக்கப்படுவர் என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்ததாவது சட்ட விரோத மின் பாவனை காரணமாக மின்சாரத்தை வழங்கும் மின் மாற்றிகள் சேதமடைகின்றன. மின்சார இணைப்புக் கம்பிகள் ஆங்காங்கே அறுந்து விழும் சந்தர்ப்பங்கள்கூட எழுந்துள்ளன.

அதுவுமன்றி சட்ட விரோத மின் பாவனையால் பல உயிர்ச் சேதங்கள் கூட எழுந்துள்ளன. அதுவும் மின்சாரத்தினை சட்டவிரோதமாக பலர் பெற்று பல மைல்தூரம் கொண்டு செல்வதால்– தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ள வேளையில்-மின்சார ஒழுக்குகள் ஏற்பட்டு பலரதுவீடுகள், கடைகள், உடைமைகள் கூட தீப்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே சட்டவிரோத மின் பாவனையை பொது மக்கள் உடன் நிறுத்த வேண்டும். இப்படி அவர்கள் கேட்டுள்ளனர்.

(உ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 87 Day Classes
பொருளியல் - குமாரவேல்
வர்த்தகம் - தேவா
கணக்கியல் - மரியதாஸ்
அளவையியல் - வேல்
இந்து நாகரிகம்- அருள்நங்கை
தமிழ் - மீரா
உயர் கலைக் கல்லூரி
73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

# உதயன்

18 - 12 - 1986 வியாழக்கிழமை

G.A.Q.
87ஆம் ஆண்டிற்கான மீட்டல்
8ஆம் ஆண்டிற்கான 2ஆம் பிரிவு
வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
விபரங்களுக்கு:
அதிபர்,
உயர் கலைக் கல்லூரி
73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

## சுவிட்சர்லாந்தில் புலிகளின் செய்திப் பலகை

### தொலைபேசியில் செய்திச் சேவை

பேர்ன், டிசம்பர் 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திப் பலகை சுவிட்சர்லாந்து தலைநகரான பேர்னிலும் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பரவலாக வாழும் பகுதிகளில் செய்திப்பலகை வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழச் செய்திகள் எழுதப்பட்டு வருகின்றன.

இதனிடையில் சுவிட்சர்லாந்தில் கடந்த ஒரு ஆண்டு காலமாக நடத்தப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திச் சேவையான தொலைபேசிச் சேவை இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இருபத்தி நான்கு மணி நேரமும் நடைபெற்று வருகிறது.

சுவிஸ் தொலைக்காட்சியில் அண்மையில் தமிழர் விடுதலைப் போராட்டம் விவரணப் படம் ஒளிபரப்பாகியது.

புலிகளின் சிறுவர் சரணாலயம், ஆயுதத் தொழிற்சாலை, புலிகளின் போர்ப் பயிற்சி, அவி வகுப்பு யாழ் மாவட்ட புலிகள் பிரமுகரான ரஹீம், யாழ் பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி பாலாதம்பு, விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் பேட்டிகளும் ஒலிபரப்பாகின. (இ-எ)

அக்கரைப்பற்றில்

## பிரதேச சபை தலைவர் தேர்தலை தமிழர் பகிஷ்கரிப்பு

அம்பாறை, டிச 18

அக்கரைப்பற்றுப் பிரதேச சபைத் தலைவர் பதவிக்கான தேர்தலை, தமிழ் கிராமோதய சபைத் தலைவர்கள் பகிஷ்கரித்தனர்

இத்தெரிவு கடந்த செவ்வாய் நடந்தது.

பிரதேச சபையில் நான்கு முஸ்லிம் கிராமோதய சபைத்தலைவர்களும் நான்கு தமிழ்க் கிராமோதய சபைத் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

அக்கரைப்பற்றுப் பிரதேச உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற தலைவர் தெரிவில் நான்கு தமிழ் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை.

நான்கு முஸ்லிம் உறுப்பினர்களும் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்து கொண்டனர், (உ-எ)

## மன்னார் மாவட்ட வங்கி அடகு நகைகள் வவுனியாவில் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 18

மன்னார் மாவட்ட வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை ஜனவரி மாதம் வவுனியாவுக்குக் கொண்டு வந்து உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கநடவடிக்கை எடுப்பதாக வவுனியா மாவட்ட முப்படைத்தளபதி உறுதியளித்தார்.

இத்தகவலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வடபிராந்திய பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. மதுரப்பிள்ளை தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த 8ஆம் திகதி நடந்த சமாதானக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அகதிகள் பிரச்சினை ஆராயப்பட்டது.

அகதிகளைப் பழைய இடங்களில் மீளக்குடியமர்த்தவும் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் திரு. மதுரப்பிள்ளை தெரிவித்தார்.

அடகு வைக்கப்பட்ட நகைகளைத் திருப்பிப் பெற பணம் செலுத்தி விட்டு காத்திருப்பவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்துக்கு வட்டி பெற்றுத்தர தான் முயற்சிப்பதாக வவுனியா முப்படைத் தளபதி உறுதியளித்தார் என்றுதிரு மதுரப்பிள்ளை சொன்னார். (தி-எ)

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் (Accountant)

குறைந்தது எட்டு வருடங்கள் தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்தவராகவும் அதே நேரத்தில் பொறியியல் சம்பந்தப்பட்ட அனுபவம் உள்ளவராகவும் இருக்கவேண்டும். நீர் விநியோக வேலைகளில் அல்லது சுரங்க அமைப்பு வேலைகளில் தகைமை அல்லது அனுபவம் பெற்றிருந்தால் இன்னும் விரும்பத்தக்கது. தகைமையுள்ளோர் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் அடுத்த வருடம் (1-1-87) அன்று காலை 8-30 க்கு எமது கந்தோருக்கு சமுகம் அளிக்கவும். நன்றி.

ROCK ENGINEER & CONTRACTORS
POINT PEDRO ROAD, KOPAY.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீடு: 18 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60/N 86

# இயக்க மோதலைப் பயன்படுத்தி கிழக்கில் படையினர் தேடுதல்

மட்டக்களப்பு, டிச 18

இயக்கங்களுக்கு இடையேயான மோதலைப் பயன்படுத்தி கிழக்கில் ஆயுதப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் தாண்டியடி என்னும் இடத்தில் இரண்டு இயக்கங்களுக்குஇடையே பலத்த மோதல்கள் இடம்பெறுவதாகக்கூறப்படும் செய்திகளைத் தொடர்ந்து ஆயுதப் படையினர் அப்பகுதிக்கு விரைந்திருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஈரோஸ் அறிக்கை

இதனிடையில் இயக்க மோதல்கள் குறித்து கவலை தெரிவித்து ஈரோஸ் இயக்கம் மட்டக்களப்பில் துண்டுப் பிரசுர அறிக்கை ஒன்றை விடுத்தது.

விடிவைத்தேடி அலையும் தமிழ்மக்கள் இயக்கங்களின் மோதலினால் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

போராளிகளுக்குஉதவுகின்றார்கள் என்பதற்காக ஆயுதப்படையினர் பொதுமக்களைப் பிரித்து சித்திரவதை செய்கின்றனர்.

இயக்க மோதல்களினால் ஓர் இயக்கத்துக்கு ஆதரவான மக்கள் இன்னொரு இயக்கத்தினால் கஷ்டத்துக்குள்ளாக்கப் படுகின்றனர்.

முதலாளித்துவ அரசின் தலைவர்களுடன் ஒரே வரிசையில் இருந்து சோஷலிச அமைப்பில் நம்பிக்கை கொண்ட அமைப்புக்கள் பேச்சுக்கள்மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்க முடியும் என்றால் —

ஒரே இலட்சியத்துக்காகப்போராடும் அமைப்புக்கள் தங்கள் பிணக்குகளை ஏன் பேசித் தீர்க்க முடியாது?

அப்படித் தீர்வு காணுவதே சரியான வழி — இப்படி ஈரோஸ் விடுத்த துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

## அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், டிச 18

யாழ் பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் இருந்த உரிமை கோரப்படாத வயோதிபரின்சடலம் ஒன்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

எஸ். செல்லத்துரை (75 வயது) என்பவரே இறந்த வயோதிபர் ஆவார்.

## போராளிகளை மிரட்டி கல்முனையில் சுவரொட்டி

அம்பாறை, டிச. 18

முஸ்லிம் பகுதிகளுக்குள் வந்துநின்று ஆயுதப் படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தக்கூடாது என்று கோரும் சுவரொட்டிகள் கல்முனை நகரில் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

அப்படி முஸ்லிம் பகுதிகளுக்குள் வந்து நின்று ஆயுதப்படையினரைத் தாக்கினால் மீண்டும் ஓர் இனக்கலவரம் வரும் —

இப்படிஅச்சுவரொட்டிகள் மூலம் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

''மு. எ. இ.'' என்ற இயக்கமே சுவரொட்டிகளை வெளியிட்டிருந்தது (உ-எ-14)

கல்முனையில் படையினர் நடத்திய

## தேடுதலில் கைதான தமிழ் இளைஞர் கொலை

மட்டக்களப்பு, டிச. 18

கல்முனைச் சுற்றிவளைப்புத் தேடுதலில் கைதான தமிழ் இளைஞர் ஆனந்தகுமார் ஆயுதப் படையினர் - போராளிகள் மோதலில் கொல்லப்பட்டுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

''போராளிகளின் முகாமைக் காட்டுவதாக ஆனந்தகுமார் முன்வந்தார் அவரை அழைத்துக்கொண்டு முகாம் இருந்த பகுதிக்குச் சென்றோம் — அங்கு போராளிகளுக்கும் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் ஆனந்தகுமார் உயிரிழந்தார்''— இப்படி பாதுகாப்புப் படை வட்டாரங்கள் ஆனந்தகுமாரைப் பார்க்க முகாமுக்குச் சென்ற உறவினர்களிடம் தெரிவித்தனவாம்.

இது குறித்து மட்டக்களப்பு பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது. (உ-எ-21)

ஊழல் பிரசாரம் செய்வதற்கு

# சிறிமாவையும் அனுராவையும் தமது செலவில் வெளிநாடு அனுப்புவர் ஜே.ஆர்.

கொழும்பு, டிச. 18

சர்வஜன வாக்கெடுப்பில் இடம்பெற்ற ஊழல்களைப் பற்றி உலகம் முழுவதும் பிரசாரம் செய்ய சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவையும் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவையும் எமது செலவில் அனுப்பி வைப்போம்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

கொடாஞ்சேனை, கல்பொத்த சந்தியில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் சொன்னதாவது;

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகள் தம்மிடம் இருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறுகிறார்,

அந்த யோசனைகளை அவர் மறைத்து வைப்பதில் பிரயோசனமில்லை அதை அவர் வெளியிட வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி அறிக்கையை வெளியிடும்படி நாம் தான் தேர்தல் ஆணையாளரைத்தூண்டினோம் தேர்தல்கள் என்றால் அவற்றில் தவறுகள் இருக்கத்தான் செய்யும்.

கொழும்பு வடக்குத் தொகுதியில் 40 சத வீதம் தமிழர் வாழ்கின்றனர். முஸ்லிம்கள் 20 சத வீதமும் சிங்களவர் 30 சத வீதமுமே வாழ்கின்றனர். இங்கு புலிகள் இல்லை.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-ஐ-எ)

### பேச்சுக்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராயம் தெரிவிக்க முடியாது'' என்று — புலிகள் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈரோஸ்

ஈரோஸ் இயக்கப் பேச்சாளர்:-

கிழக்கு மாகாணத்தை 3ஆகப் பிரிக்கும் பேச்சை எதிர்க்கிறோம். மலையகத் தமிழ்ப் பகுதியும் சேர்ந்த தமிழர் தாயகம்தான் எமக்குத் தேவை.

ஈ. பி. ஆர். எல். எவ்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பேச்சாளர்;—

கிழக்கு மாகாணத்துக்குத் தனிமாகாண சபையையே நாம் எதிர்க்கிறோம் பின்னர் கிழக்கு மாகாணம் மூன்றாகப் பிரிக்கப்படுவதை எப்படி ஏற்பது?

டெலோ

தமிழீழ விடுதலை இயக்கப் பேச்சாளர்:—

தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.

புளொட்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் பேச்சாளர்;-

இலங்கை யோசனைகள் வெறும் அரசியல் சட்டத் திருத்தமே தவிர தமிழரின் உரிமைகள்பற்றி எதுவும் அதில் இல்லையே. (உ-ஐ-எ)

### நீலன், பதியுத்தீன்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளியுறவு உதவிச் செயலாளர் சகாதேவ் முதலியோரும் வந்திருந்தனர்.

இந்தியக் குழு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் தங்கியிருக்கிறது.

முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வத்தை இந்திய அமைச்சர்கள் சந்தித்தனர். சந்திப்பின்போது மன்னார் முன்னாள் எம். பி.-பி. எஸ். சூசைதாசனும் கலந்து கொண்டார்.

பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் இந்தியக் குழுவைச் சந்தித்தார்.

இதன் பின்னர் தொண்டமான் இந்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார். (இ-எ)

### மாப்பிள்ளை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொ. விஜயகுமார், தர்மசேகரம் ஆகியோர் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று படையினர் கூறுகிறார்கள் என்றாலும் அவர்களைப் பார்வையிட உறவினர்களை அனுமதிக்கின்றார்கள் இல்லை.

தடுத்து வைக்கப்பட்ட ஏனையவர்களைப் பார்வையிட உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படும் போது ஏன் இவர்கள் இரண்டு பேரையும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்பது உறவினர்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டக்களப்புப் பிரசைகள் குழுவுக்கு முறையிட்டுள்ளனர். (இ-எ-21)

# ராஜீவ் - எம்.ஜி. ஆருக்கு சுவீஸ் தமிழர் மகஜர்

பேர்ன், டிச 17

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடமே திருப்பி ஒப்படையுங்கள். எதிர்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து வெளியேறும் நிர்ப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தாதீர்கள்.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழக முதல் அமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் ஆகியோருக்கு அனுப்பிய மகஜரில் முன்கண்டவாறு கோரியுள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னை தமிழீழ மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்துள்ளது.

இந்திய நாட்டுச் சட்ட திட்டங்களையும் இந்திய மக்களின் ஆதரவையும் மதித்து நடக்கும் ஓர் இயக்கம் இது

இந்த இயக்கத்திடம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றியமை, தலைவர்களைச் சிறை வைத்துத் துன்புறுத்தியமை அடக்குமுறைக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தமிழருக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கையினால் தூண்டப்பட்ட இலங்கை இராணுவம் இலங்கைத் தமிழர் பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டது. தமிழ்நாடு பொலீஸாரின் நடவடிக்கையினால் எழுந்த பலன்கள் இவை.

தமிழ்நாடு மண்ணில் இருந்துகொண்டு விடுதலை வீரர்கள் என்று காட்டிக்கொண்டு கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடும் உதிரிக் குழுக்களின் பொறுப்பற்ற செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அப்படியானவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படி இந்திய அதிகாரிகளை நாம் கோருகிறோம்.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

இந்த மகஜர் சுவிஸில் உள்ள இந்திய தூதர் மூலம் இந்தியப் பிரதமர், தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ-எ)

## ஓய்வூதியருக்கு உதவினார் கொத்தலாவலை

யாழ்ப்பாணம், டிசம்பர் 18

ஓய்வூதியம் பெற வந்தவர்களுக்கு கப்டன் கொத்தலாவலை உதவினார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோட்டை முகாமுக்கு ஓய்வூதியம் பெற ஓய்வூதியர்கள் வந்தனர்.

இவர்களுள் வயது முதிர்ந்த சில ஓய்வூதியர்கள் களைப்புக் காரணமாக அமர்ந்து விட்டனர்.

இதனை அவதானித்த கப்டன் கொத்தலாவலை அவர்களை அழைத்து வந்து முதலில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலக அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்,

தாமே முன்னின்று ஓய்வூதியங்களைப் பெற்று அவர்களுக்கு வழங்கினார்.

மேலும் அலுவலக அதிகாரிகளுடன் தாமும் கூட நின்று நடக்க முடியாத சில ஓய்வூதியர்களுக்கு விரைவாக ஓய்வூதியங்களைப் பெற்றுக் கொடுத்தார். (இ-10)

## பலர் கைது!

மட்டக்களப்பு, டிச.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான், வேப்பவெட்டுவான், களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளில் நேற்று நடந்த தேடுதலில் பலர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ-எ-21)

## இலங்கை முன்னணியில்

கான்பூர் 17

கான்பூரில் நேற்று இந்திய இலங்கை அணிகளுக்கிடையில் ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி சிறப்பாக விளையாடி முன்னணியில் திகழ்கிறது

நேற்று ஆட்டம் முடிந்தபோது இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

சித்தாத் வெற்றிமுனி 79 ரவி ரட்ணாயக்கா ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர். (உ)

### யாழ் நகரில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேறிவிட்டதாக வதந்தி வேகமாக நகரெங்கும் பரவியதையடுத்தே இந்தப்பதற்றம் ஏற்பட்டது.

கோட்டையிலிருந்து நேற்றிரவு இராணுவம் வெளியேற முற்பட்ட போதும் போராளிகள் எதிர்த்தாக்குதல் நிகழ்த்திஅதனைத்தடுத்துவிட்டனர்.

நேற்றிரவு இடையிடையே குண்டுச் சத்தங்களும் கேட்டன அவை போராளிகள் வீசிய கிரனேட்டுகள் என அறியப்படுகிறது.

இதன் பின்னர் விடுதலைப் புலிகள் நவீனரக ஆயுதங்களுடன் நகரில் ரோந்துப் பணியை மேற்கொண்டனர். (உ-10)

## விசர்நாய் கடித்து 6 மாதங்களின்பின் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 18

விசர்நாய் கடித்த சிறுவன் ஒருவர் ஆறு மாதங்களின்பின் மரணமானார்.

வீரகத்தி தவக்குமார் (10 வயது) என்பவரே இறந்தவர் ஆவர்,

இவரது மரணவிசாரணையை யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

விசர்நாய் கடித்ததால் மரணம் ஏற்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-10)

## யாழ் நகரில் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் டிச. 18

குருநகரில் குண்டு வெடித்து மரணமான புலிகள் இயக்கத்தின் குருநகர்ப் பகுதிப் பொறுப்பாளர் அன்ரன் தேவதாஸின் மரணத்திற்கு நேசறு யாழ்நகரில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகளிலும், வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

ஒலிபெருக்கிகளிலும் சோக இசை ஒலிபரப்பப்பட்டது.

குருநகர்ப் பகுதியும் இச்சம்பவத்தால் சோபை இழந்து காணப்பட்டது. (இ-10)

### ஆயுதப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

கப்பலில் இருந்து ஆயுதப் படையினருக்கான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருந்த சமயம் ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் ஆகாயத்தில் பறந்து வட்டமிட்டவாறு பாதுகாப்பு வழங்கின. (உ-எ-68)

## காங்கேசனில் ஷெல் தாக்குதல்

காங்கேசன்துறை, டிச. 18

கடந்த செவ்வாய் இரவு 9-45 மணி அளவில் காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் முகாமில் இருந்து மாவிட்டபுரம் நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

இரண்டு ஷெல்கள் மாவிட்டபுரம் — கீரிமலை வீதியில் விழுந்து வெடித்தன.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் நடந்த இத்தாக்குதலில் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (உ-எ-68)

### இடமாற்றம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுவ முகாமில் உள்ள சிப்பாய்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகவே நான் தியாத்தலாவலைக்குச் சென்றேன்.

இவ்வாறு கப்டன் கொத்தலாவலை தெரிவித்தார்.

கோட்டை முகாமுக்குள் உள்ளவங்கி, தபால் அலுவலக ஊழியர்களுடன் கலந்துரையாடுகையிலேயே கப்டன் கொத்தலாவலை இதனைத் தெரிவித்தார். (இ.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org